

தர்மபுரி வருவாய் கோட்ட அலுவலக வளாகத்தில் புனரமைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி, மாவட்டக் கழக செயலாளர்கள் தடங்கம்.பெ.சுப்ரமணி, முனைவர்.பி.பழனியப்பன்,தர்மபுரி தொகுதி பொறுப்பாளர் டாக்டர்.தருண், முன்னாள் மாவட்டச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன், நகர் மன்ற தலைவர் லட்சுமி மாது, நகர செயலாளர் நாட்டான் மாது, மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வடக்கு, தெற்கு ஒன்றியம் சார்பில் திருமயத்தில் நடைபெற்ற பாக முகவர்கள் கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் திருமயம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான ராஜா, ஒன்றிய செயலாளர்கள் அழகு சிதம்பரம், இரா.கணேசன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் இரா. மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, மாவட்ட பிரதிநிதிகள் சுப.துரைராஜா, சீமானூர் கணேசன், முல்லை ரமேஷ், டாக்டர் ராஜசேகர பாண்டியன், அருண் சேகர், தொண்டரணி சாமி சுரேஷ், ஆறுமுகம், இன்ஜினியர் ஆறுமுகம், ஒன்றிய நிர்வாகிகள் குமார், நீலமேகம் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கரூர் மாவட்டச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிக்கை!

*கரூர், நவ. 8-*

கரூர் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கரூர் மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் நாளை (09.11.2024 - சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கம்) மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத் துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராய புரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா,

தொகுதி பார்வையாளர்கள் அறிமுகம்,

வாக்காளர் பட்டியல் சரி பார்ப்பு மற்றும் சேர்த்தல், நீக்கல் சிறப்பு முகாம் 16.11.2024 சனிக்கிழமை, 17.11.2024 ஞாயிற்றுக்கிழமை மற்றும் 23.11.2024 சனிக்கிழமை, 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை,

கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், அஞ்சூர் ஜெகதேவி அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் பள்ளி நூலகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் மற்றும் பள்ளி கல்வித்துறை அலுவலர்கள் உள்ளனர்.

## புதுச்சேரி மாநில நிர்வாகிகள், தொகுதி கழக நிர்வாகிகள் -

# பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா அறிவிப்பு !

*புதுவை, நவ.8-*

புதுவை மாநிலக் கழக அமைப்பாளர் இரா. சிவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர், கழகத் தலைவர் தொகுதி மேற்பார்வையாளர் கூட்டத்தில் அறிவித்ததின் அடிப்படையில், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல் முகாம் குறித்து பாக முகவர்கள் (பி.எல்.ஏ.-2) ஆலோசனைக் கூட்டம் இன்று (08.11.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

மாநில கழக அவைத் தலைவர் எஸ்பி. சிவக்குமார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாநில கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி வாரியாக நியமிக்கப்பட்ட பாக முகவர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேணுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி அரூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கோ.சந்திரமோகன் ஏற்பாட்டில் தீர்த்தமலையில் நடைபெற்ற BLA2 ஆலோசனைக் கூட்டத்தில் அரூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் சி.செல்லத்துரை கலந்துகொண்டு கழக பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.கூட்டத்தில் மாவட்ட துணைச்செயலாளர் சி.கிருஷ்ணகுமார்,ஜெய்லூப்தீன் சண்முகம்,ரஜினிமாறன் உள்ளிட்ட BLA2 BLC கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் - உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பி.எல்.ஏ. 2 - பூத் கமிட்டி உறுப்பினர்கள் கவனத்திற்கு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட்டுள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர 16.11.2024(சனிக்கிழமை), 17.11.2024 (ஞாயிற்றுக்கிழமை), 23.11.2024(சனிக்கிழமை), 24.11.2024(ஞாயிற்றுக்கிழமை), நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்களர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் - 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் -7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்படிவமான படிவம்6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் கலம் IV-ல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1.வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024.

2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை.

3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 16.11.2024(சனிக்கிழமை), 17.11.2024(ஞாயிற்றுக்கிழமை), 23.11.2024(சனிக்கிழமை), 24.11.2024(ஞாயிற்றுக்கிழமை).

4.இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025.

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகர, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு:

வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்றத் தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும், மேலும் சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களில் வாக்காளர் சேர்க்கும் பணிகளைதலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பார்வையிட உள்ளனர்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

## மயிலாடுதுறை மாவட்டத்தில்

# சட்டமன்ற தொகுதிகள் வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் நிவேதா எம். முருகன், எம்.எல்.ஏ., அறிவிப்பு



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகள் வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன், எம்.எல்.ஏ தலைமையில், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் N.இளையராஜா, மண்ணை த சோழராஜன், M.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் ஏற்பாட்டில் நடைபெறுகிறது. கூட்டங்களில் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

### மயிலாடுதுறை தொகுதி

| தேதி | நேரம் | ஒன்றியம்/பேரூர் | இடம் | பூத் |
|---|---|---|---|---|
| 09.11.2024 | காலை 10 மணி | மயிலாடுதுறை வடக்கு<br>மயிலாடுதுறை மத்தியம்<br>மணல்மேடு பேரூர் | பத்மவாசன் திருமண மண்டபம்,<br>பல்லவராயன் பேட்டை | 48<br>59<br>10 |
| | மதியம் 11.30 மணி | மயிலாடுதுறை நகரம் | விஜய் மஹால்,<br>மயிலாடுதுறை | 71 |
| | மாலை 04.00 மணி | மயிலாடுதுறை மேற்கு<br>மயிலாடுதுறை கிழக்கு<br>குத்தாலம் வடக்கு<br>குத்தாலம் பேரூர் | நாராயணி மஹால்,<br>மாப்படுகை | 22<br>25<br>17<br>14 |
| | | | மொத்தம் | 266 |

### சீர்காழி தொகுதி

| தேதி | நேரம் | ஒன்றியம்/பேரூர் | இடம் | பூத் |
|---|---|---|---|---|
| 10.11.2024 | காலை 10 மணி | சீர்காழி மேற்கு<br>சீர்காழி கிழக்கு<br>சீர்காழி நகரம்<br>வைத்தீஸ்வரன்கோயில் பேரூர்<br>செம்பை வடக்கு | ஒன்றிய அலுவலகம்,<br>சீர்காழி | 48<br>58<br>32<br>08<br>09 |
| | மாலை 04.00 மணி | கொள்ளிடம் மேற்கு<br>கொள்ளிடம் கிழக்கு | அருண்பாலாஜி<br>திருமண மண்டபம்<br>கொள்ளிடம் | 78<br>55 |
| | | | மொத்தம் | 288 |

### பூம்புகார் தொகுதி

| தேதி | நேரம் | ஒன்றியம்/பேரூர் | இடம் | பூத் |
|---|---|---|---|---|
| 12.11.2024 | காலை 10 மணி | செம்பை வடக்கு<br>செம்பை மத்தி<br>செம்பை தெற்கு<br>தரங்கை பேரூர்<br>சீர்காழி கிழக்கு | அண்ணா திருமண<br>மண்டபம், செம்பை | 64<br>47<br>47<br>20<br>21 |
| | மாலை 10 மணி | குத்தாலம் கிழக்கு<br>குத்தாலம் மேற்கு<br>குத்தாலம் வடக்கு | ஸ்ரீமதி திருமண மண்டபம்<br>கோமல் | 39<br>35<br>33 |
| | | | மொத்தம் | 306 |

குறிப்பு : வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (B.L.A.2) கூட்டத்தை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர் சிறப்பாக செய்வதுடன் அனைத்து வாக்குச்சாவடி நிலை முகவர்களும் தவறாமல் கலந்துக்கொள்வதை உறுதிசெய்திட வேண்டும். மேலும் கூட்டத்தில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஏற்கனவே கழகத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை அணிந்து அனைவரும் கலந்துக்கொள்ள செய்திட வேண்டும்.

**நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ**
செயலாளர்
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க